පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 79

ආයතනයේ නම : කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 79

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்கனிற்குப் பெறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடாபாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 79

Name of the institution: Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம்: 79
நிறுவனத்தின் பெயர் : கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

அரசாங்க நிறுவனங்களினதும், மாகாண சபைகளினதும், உள்ளூராட்சி மன்றங்களினதும் நிதி அனுசரிப்பையும் மற்றும் இயக்கச்செயற்பாட்டு செயலாற்றுகையையும் மெய்நிகர் தகவல் முகாமைத்துவ முறைமையின் மூலம் மதிப்பிடுதல் - நிதியாண்டு 2022	
கமத்தொழில் அமைச்சு முதலாம் பாகம்: 80.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் கணக்காய்வு விசாரணைகளுக்கு தாமதியாமல் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது பற்றி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் கணக்காய்வு விசாரணைகளுக்கு தாமதியாமல் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது பற்றி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

சகல வாகனங்களினதும் உரித்தை உறுதி செய்கின்ற ஆவணங்கள் உடமையில் இருந்திருக்கவில்லை.	விவசாயப் பிரிவு பயன்படுத்துகின்ற 52 வாகனங்களில் 38 வாகனங்களின் உரித்தை உறுதி செய்கின்ற ஆவணங்கள் அமைச்சின் உடமையில் உள்ளன. மேலும் 14 வாகனங்களின் உரித்து வேறு நிறுவனங்களின் பெயரில் உள்ளன. அந்த வாகனங்களில் 04 வாகனங்களை இந்த அமைச்சுக்கு உரிமை மாற்றிக் கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்களை அந்த நிறுவனங்களின் விருப்பத்தின் பேரில் உரிமை மாற்றிப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது அந்த வாகனங்களை மீண்டும் ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அறியத் தருகின்றேன்.
வாகன கொட்டகையில் உள்ள வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் சுருக்க அறிக்கைகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	வாகன கொட்டகையில் உள்ள வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் சுருக்க அறிக்கைகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு மாதாந்தம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை.	எல்லா வாகனங்களுக்கும் அரச சின்னங்கள் ஒட்டப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.
எல்லா வாகனங்களுக்கும் லொக் குறிப்பு புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.	எல்லா லொக் குறிப்பு புத்தகங்களும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.
மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து வந்த செயலிழந்த வங்கி கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	இது விவசாய பிரிவுக்கு ஏற்புடையதல்ல. தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள செயலிழந்த கணக்குகள் எதுவும் கிடையாது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம் ஒரு செலவின தலைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிதியேற்பாடுகளில் நிதிகளை உபயோகித்த பின்னர் ஆண்டு இறுதியில் எஞ்சி இருந்த நிதியின் வரையறையை விஞ்சும் வகையில் பொறுப்புக்களுக்கு உள்ளாகி இருந்திருந்தது.	முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் நிதியேற்பாட்டை விஞ்சாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நி. பி. கு. இலக்கம் 94 (2) இன் கீழ் ஒரு சில பொறுப்புக்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. எதிர்காலத்தில் நிதியேற்பாட்டினுள் இருந்து பொறுப்புக்களை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.
குறித்த காலம் கழிந்து நிதி வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.	வேறு நிறுவனங்களின் செயலாற்றுகை திட்டத்திற்கு இணங்க நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருந்திருந்தன.	ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
பொது வைப்பு கணக்கில் காலம் முடிவடைந்து இருந்த வைப்புக்கள் தொடர்பில் நி. பி. கு. இலக்கம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	இது விவசாய பிரிவுக்கு ஏற்புடையதல்ல.
நி. பி. கு. இலக்கம் 371 இன் பிரகாரம் வழங்கிய சமயோசித வசக்கட்டுநிதி கருமம் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	நி. பி. கு. இலக்கம் 371 இன் பிரகாரம் விடுவித்த சமயோசித இடைக்கால வசக்கட்டுநிதியை உரிய முறையில் பிரிசீலித்து விரைவில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Avenue,
Battaramulla.

இரண்டாம் பாகம்: 76.00	
2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய முறையில் தயாரிக்க வேண்டிய ஒரு மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	2018 01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டிற்கு உரியவாறு ஒரு மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்டு இருந்த மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பதவியணியில் நூற்றுக்கு 50% வீதத்திற்கு அதிகமான ஊழியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கள் உறுதி செய்யப்பட்டு இருக்கவில்லை.	கோவிட்-19 தொற்று நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி செயலகமும், சுகாதார அமைச்சும், பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சும் வெளியிட்டு இருந்த கீழ்காணும் கடிதங்களுக்கும் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் இணங்க அலுவலக பணிகளின் நிமித்தம் உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தியமையும் மற்றும் நபர்கள் ஒன்றுகூடி செயற்படுவதை மட்டுப்படுத்தியமையும் 2022 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் இருந்து வழங்கிய பயிற்சி வாய்ப்புகள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தமைக்கு காரணமாகும். I. நிலவுகின்ற வளங்களின் பற்றாக்குறையின் அடிப்படையில் அரசாங்கத்தின் செலவுகளை குறைக்கும் பொருட்டு அரசாங்க நிறுவனங்களின் பதவியணிகளை பணிக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 10/2022 ஆம் இலக்க 2022.05.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை. II. அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு நாள் வீட்டில் இருந்து கொண்டு விவசாயத்திலும் பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபடுவதற்கு வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 15/2022 ஆம் இலக்க 2022.06.15 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் 15/2022(I) ஆம் இலக்க 2022.08.03 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை. III. அரசாங்க அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பதை மட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 16/2022 ஆம் இலக்க 2022.06.07 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	VI. அரசாங்க அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பதை மட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பொது நிருவாக அமைச்சின் செயலாளரினது PUB/ADM/SEC/07 ஆம் இலக்க 2022.06.27 ஆம் திகதிய கடிதம். III. அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான 03/2022 ஆம் இலக்க 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கை.
ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டிற்கு ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.
மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருக்கவில்லை.	மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.
திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன.	2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கிய பயிற்சி வாய்ப்புகள் மேற்குறித்த காரணங்களினால் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன. தற்பொழுது 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் 80% வீதத்திற்கு அதிகமான வாய்ப்புகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் /நிச்சயமற்ற மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் இருந்தது.	2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ள ஒரு கணக்காய்வு அபிப்பிராயமாக காணப்படுகின்றது. கணக்காய்வு அபிப்பிராயம் நிச்சயமற்ற அல்லது பாதகமான விதத்தில் முன்வைக்கப்படவில்லை.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு முதலாம் பாகம்: 97.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
அவதான பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.	அவதான பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.
ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருந்திருந்தன.	01. <u>இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறிவிடுவதற்கு இருக்கின்ற தொகை</u> **திரு எச்.டீ.கே. கொட்வின் (அலுவலக உதவியாள்) - ரூ. 36,116.00** 01/2024 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க 2024 ஆம் ஆண்டில் கணக்கு புத்தகங்களில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 02. <u>வேலையில் இருந்து இடைநீக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற தொகை</u> **திரு டப்ளியூ.எல்.ஜி. விஜேசிங்க - ரூ. 255,997.00** இந்த விடயம் அது தொடர்பான ஒரு வழக்கை தாக்கல் செய்வதற்கானதல்ல. எனினும் ஏலத்தை செயற்படுத்திய பின்னர் காணிகளை பெற்றுக் கொள்ளும் நபர்களுக்கு காணி உறுதிகளை எழுதும் போது அமைச்சின் செயலாளர் எழுதிக் கொடுக்க முடியுமா என்பது பற்றியும் மற்றும் ஏலத்தில் அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு இருந்த தொகையை விடவும் மேலதிக தொகை கிடைத்தால் அந்த தொகை தொடர்பில் பின்பற்ற வேண்டிய முறையியல் பற்றியும் 2020.09.11 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் இருந்து அறிவுரைகள் கோரப்பட்டன. அதற்கு 2021.01.07 ஆம் திகதி ஒரு கடிதத்தை அனுப்பி சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருப்பது காணிகளை ஏலத்தில் விடுவதற்கும் அதன் பின்னர் அந்த காணிகளை உரிமை மாற்றிக் கொடுப்பதற்கும் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் இருப்பதாக பிரகடனப்படுத்திற் கொள்ளும் முகமாக சிவில் வழக்குகள் நடைமுறை சட்டக் கோவையின் 628 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல்

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

செய்து ஒரு பிரகடன உத்தரவை பெற்றுக் கொள்ளுமாறாகும். அதற்கு இணங்க, தேவையான ஒழுங்குகளை செய்து தருமாறு 2021.02.12 ஆம் திகதி மீண்டும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 2021.10.13, 2022.09.28 மற்றும் 2022.12.08 ஆகிய திகதிகளில் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் 2022.10 திகதியற்ற ஒரு கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களம் சில தகவல்களை கேரியிருந்தது. அந்த தகவல்கள் உரிய பிரிவுகளிடம் இருந்து பெறப்பட்டு 2023.01.30 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் 2023.04.12 ஆம் திகதி மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2023.04.17 ஆம் திகதி அன்று ஒரு பூர்வாங்க சட்ட ஆலோசனை கலந்துரையாடலும் நடத்தப்பட்டுள்ளது. அதன் போது கோரப்பட்டு இருந்த ஆவணங்கள் 2023.04.20 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. மீண்டும் 2023.06.21 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்களை கோரி ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது. அந்த வேண்டுகோளின் மூலம் கோரியிருந்த அந்த தகவல்களும் 2023.09.20 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த கோவை 4-5 அரசாங்க சட்டத்தரனிகளுக்கு கிடைத்துள்ளன. கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிசீலனையின் போது மீண்டும் புதிய ஒரு சட்டத்தரனியிடம் அந்த கோவை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்டு வினவிய போது 2024.07.23 ஆம் திகதியை அறிவித்திருப்பது அவருக்கும் அந்த கோவையை ஆராந்து பரிசீலனை செய்ய வேண்டி இருப்பதால் கால அவகாசம் தேவை எனவாகும்.

இந்த விடயத்தில் அற்றோனித் தத்துவம் அரசாங்கத்தின் சார்பாக இருக்கின்ற திரு உபனந்த விதாண பத்திரன அவர்களுக்கு ஒரு தடவை தொலைபேசியில் நான் தெரிவித்தது இந்த காணி உறுதியில் கையொப்பமிட்டு தருமாறாகும். ஆயினும் அவர் அதற்கு மறுத்ததால் மேற்குறித்த நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதன் நிமித்தம் சட்டமா அதிபர் திணைக்களம் தேவையான தலையீடுகளை விரைவில் செய்யுமாயின் தனிப்பட்ட சட்டத்தரனி ஒருவரின் ஊடாகவோ (அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையியலை பின்பற்றி) அல்லது நடவடிக்கையை எடுத்தோ செயற்படுத்த முடியுமாயின் நிதியை பெற்றுக் கொள்ளும் முகமாக சொத்தை ஏலத்தில் விற்பனை செய்ய சட்டரீதியில் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு இ.எல். லயனல் (அலுவலக உதவியாள்) - ரூ. 30,760.00

01/2024 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க கணக்கு புத்தகங்களில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	திரு நிஷாந்த விஜேகோன் (அலுவலக உதவியாள்) - ரூ.111,754.00 இந்த வழக்கு தொடர்பான கொடுப்பனவுகளை செலுத்த தவறியதன் காரணமாக இந்த நபரின் சொத்துக்களை பறிமுதல் செய்து உரிய தொகையை அறிவிடும் பொருட்டு ஒரு வழக்கை தாக்கல் செய்யுமாறு 2017.06.23 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கு இணங்க சட்டமா அதிபர் திணைக்களம் அந்த வழக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அந்த வழக்கு உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என அறிவித்து உரிய மாவட்ட நீதிமன்றத்தின் கௌரவ நீதிபதி அவர்கள் அந்த வேண்டுகோளை நிராகரித்துள்ளதாக, நீதிமன்றத்தில் பதியப்பட்டுள்ள வழக்கு கோவையை பரிசீலித்த போது தெரிய வந்ததால் 2023.12.18 ஆம் திகதி அது பற்றி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2024.02.14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம், குறித்த உத்தரவின் ஒரு பிரதியை பெற்று சமர்ப்பிக்குமாறு எமக்கு அறிவித்து இருந்தது. அந்த பிரதி 2024.03.04 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் 2024.07.01 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருப்பது வாதியின் இணக்க தீர்வு பிரகடனத்தின் ஒரு பிரதியை பெற்று சமர்ப்பிக்குமாறாகும். அந்த பிரதியும் நீதிமன்றத்தில் இருந்து பெற்று 2024.07.22 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2023.03.10 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த அந்த நாள் அறிவுரை வழங்கப்பட்டு இருப்பது பிரதிவாதிக்கு அழைப்பாணையை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்றில் கேட்குமாறாகும். எனினும் இது வரை சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்குறித்த 2024.07.22 ஆம் திகதி அனுப்பி வைத்த கடிதத்தின் பின்னர் எடுத்துள்ள நடவடிக்கைகளை பரிசீலிக்க வேண்டியுள்ளது. **03. <u>சேவையை விட்டும் விலகிச்சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற தொகை</u>** **திரு எம். எம். எஸ். திஸாநாயக்க (அலுவலக உதவியாள்) - ரூ. 128,002.00** இந்த உத்தியோகத்தர் தனது கடன் நிலுவையை படிப்படியாக மாதாந்தம் செலுத்தி தீர்ப்பதற்கு தவறிய காரணத்தினால் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் பிணையாளியிடம் இருந்து அறவிட்டு அனுப்புமாறு பிணையாளியின் பணி நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

விவசாயத் திணைக்களம் முதலாம் பாகம்: 84.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	**குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
அவதான பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு பிரிவு அவதானம் பட்டியலை பேணி வருகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.
கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	2022 நிதி ஆண்டு தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதி வெளியிட்டு இருந்த சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தாலும், பல சந்தர்ப்பங்களில் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை சமர்ப்பித்த போது ஒரு மாதத்திற்கு அதிக காலம் தாமதமாகியுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். இந்த திணைக்களத்தில் உள்ள கட்டமைப்பு மிகவும் சிக்கல்வாய்ந்தது என்பதால் உரிய பணிப்பாளர் பிரிவு பதில்களை அனுப்ப தாமதித்தமை பதில்களை அனுப்ப தாமதித்ததற்கு காரணமாகும். கணக்காய்வு விசாரணைகள் உரிய பணிப்பாளருக்கு கிடைக்கும் போதும் மற்றும் கணக்காய்வு விசாரணைகளின் நிமித்தம் பொறியியல் கணக்கு பிரிவுக்கு பதில்கள் மீண்டும் கிடைக்கும் போதும் பணிப்பாளர் பிரிவினதும், பிரதி பணிப்பாளர் பிரிவினதும் மற்றும் உரிய துணை பிரிவுகளினதும் மேற்பார்வை அதிகாரிகளின் ஊடாக அவை அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். மேலும், இந்தத் திணைக்களத்தின் கரும பணிகளுக்கு அமைய கணக்காய்வு விசாரணைகளின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் சிபாரிசுகளை செயன்முறை ரீதியாக செயற்படுத்தும் போது ஏதாவது ஒரு காலம் எடுக்கின்றது. மிகவும் வெற்றிகரமான முறையில் பதில்களை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் மேற்குறித்த பிரிவுகளின் ஊடாக அவற்றின் மேற்பார்வை அதிகாரிகளின் சிபாரிசுகளுடன் பதில்களை பெற்றுக் கொள்வது வெற்றிகரமாக அமையும். ஆகையால், கணக்காய்வு விசாரணைகளுக்கு முழுமையான பதில்களை பெற்றுக் கொடுக்க சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்திற்கு அதிக காலம் எடுப்பதை தவிர்க்க முடியாது என்பதை தயவுடன் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். எனினும், கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில்களை சமர்ப்பிப்பதற்கு விவசாய பணிப்பாளர் நாயகத்தின் කෘදෙ/මු/8/6/ර.ගි.කා.ස. என்ற இலக்க 2024.07.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சகல பணிப்பாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கைகளை சமர்ப்பித்த பின்னர் அந்த அறிக்கைகளுக்கு முழுமையான பதில்களை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் தற்காலிக பதில்களை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன். 2022 ஆம் ஆண்டிற்கு வெளியிடப்பட்டு இருந்த உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கைகளுக்கு முழுமையான பதில்கள் கிடைத்துள்ளன என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன். திணைக்களத்தின் கட்டமைப்பு மிகவும் சிக்கல்வாய்ந்தது என்பதால் உரிய அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய நபர்களுக்கு கிடைக்கும் போதும் மற்றும் பதில்கள் மீண்டும் உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு கிடைக்கும் போதும் பணிப்பாளரினதும், பிரதி பணிப்பாளரினதும் மற்றும் உரிய உப பிரிவுகளினதும் மேற்பார்வை அதிகாரிகளின் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பது கணக்காய்வு விசாரணை அறிக்கைகளுக்கு பதில்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என நான் அவதானிக்கின்றேன். மேலும் இந்த திணைக்களத்தின் கரும பணிகளுக்கு அமைய உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கைகளின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் சிபாரிசுகளை செயன்முறை ரீதியில் செயற்படுத்தும் போது ஏதாவது ஒரு காலம் எடுக்கும். மிகவும் வெற்றிகரமான முறையில் பதில்களை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் மேற்குறித்த பிரிவுகளின் ஊடாக அந்த மேற்பார்வை அதிகாரிகளின் சிபாரிசுகளுடன் பதில்களை பெற்றுக் கொள்வது மிகவும் வெற்றிகரமான செயன்முறையாகும். ஆகையால் கணக்காய்வு விசாரணை அறிக்கைகளுக்கு முழுமையான பதில்களை பெற்றுக் கொள்ள ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு மாத்திற்கு அதிக காலம் எடுக்கும் என்பதை குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.
சகல வாகனங்களினதும் உரித்துக்களை உறுதி செய்கின்ற ஆவணங்கள் உடமையில் இருக்கவில்லை.	விவசாய திணைக்களத்தின் 05 உப பிரிவுகளினது வாகனங்களின் உரித்தை உறுதி செய்கின்ற ஆவணங்கள் உடமையில் உள்ளன. அந்தந்த பிரிவுகளின் வாகனங்களில் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களினது பதிவு சான்றிதழ்களின் இணைப் பிரதிகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அது பற்றி கடிதத்தின் மூலம் அந்தந்த பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. • தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதிவு சான்றிதழ்களில் உள்ள தகவல்களை வாகனங்களின் தரவு முறைமையினுள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த தரவு முறைமையின் பிரகாரம் கீழ்காணும் தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

தொ.இல	உப பிரிவு	உரித்தை உறுதி செய்யும் பொருட்டு பதிவு சான்றிதழ்களின் இணைப் பிரதிகளை பெற்றுக் கொள்ள வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை
01	நிருவாகப் பிரிவு	சகல வாகனங்களினதும் பதிவு சான்றிதழ்கள் உள்ளன
02	நிதிப் பிரிவு	
03	முன்னேற்ற செயற்பாடுகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு	
04	சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையம்	
05	இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம்	
06	பொறியியல் பிரிவு	02
07	தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம்	05
08	நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்	11
09	வயல் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்	18
10	பழங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்	11
11	தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்	04
12	விதைகள் சான்றுபடுத்தல் மற்றும் நடுகைக்கன்றுகள் பாதுகாப்பு நிலையம்	04
13	வியாபிப்பு மற்றும் பயிற்சி நிலையம்	46
14	விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	48

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

<table>
<tr>
<td>எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை.</td>
<td>விவசாய திணைக்களத்தின் 07 உப பிரிவுகளினது வாகன கொட்டகையில் உள்ள சகல வாகனங்களிலும் அரச சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஏனைய உப பிரிவுகளினது வாகனங்களுக்கு அரச சின்னங்களை பொறிக்குமாறு கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>தொ.இல.</th><th>உப பிரிவு</th><th>அரச சின்னங்களை பொறியிடுதல்</th></tr>
<tr><td>01</td><td>நிருவாகப் பிரிவு</td><td rowspan="6">வாகன கொட்டைகளில் உள்ள சகல வாகனங்களுக்கும் அரச சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>02</td><td>நிதிப் பிரிவு</td></tr>
<tr><td>03</td><td>பழங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்</td></tr>
<tr><td>04</td><td>தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்</td></tr>
<tr><td>05</td><td>இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம்</td></tr>
<tr><td>06</td><td>வயல் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்</td></tr>
<tr><td>07</td><td>சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையம்</td><td>வாகன கொட்டைகளில் உள்ள சகல வாகனங்களுக்கும் அரச சின்னங்களை பொறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>08</td><td>விதைகள் சான்றுபடுத்தல் மற்றும் நடுகைக்கன்றுகள் பாதுகாப்பு நிலையம்</td><td>17 வாகனங்களுக்கு அரச சின்னங்கள் பொறிக்கப்படவுள்ளன.</td></tr>
</table>
</td>
</tr>
</table>

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	கீழ்காணும் உப பிரிவுகளுக்கு சொந்தமான வாகன கொட்டகைகளில் உள்ள வாகனங்களுக்கு அரச சின்னங்களை பொறிப்பது தொடர்பாக 2024.07.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வினவப்பட்டுள்ளது. i. விதைகள் மற்றும் நடுகைக்கன்று மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் ii. வியாபிப்பு மற்றும் பயிற்சி நிலையம் iii. பொறியியல் பிரிவு iv. விதைகள் சான்றுபடுத்தல் மற்றும் நடுகைக்கன்றுகள் பாதுகாப்பு நிலையம் v. தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் vi. நிதிப் பிரிவு vii. நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
ஒரு வாகனம் செயலிழந்து 08 மாதத்திற்கு குறைந்த ஒரு காலப் பகுதியினுள் அகற்றப்பட்டு இருக்கவில்லை.	விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான அகற்றுவதற்கு பொருத்தமான உடைந்த வாகனங்கள் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. உரிய ஆண்டின் வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புகளுக்கு அமைய 47 ஆம் இலக்க பொது படிவத்தில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கு இணங்க வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு பணிகள் நிறைவடைந்து இருப்பது 01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 11.1 ஆம் அத்தியாயத்தின் நி. பி. கு. இலக்கம் 756 (6) இற்கு அமையவாகும். உரிய ஆண்டின் மார்ச் மாதம் 15 ஆம் திகதியளவிலாகும். அதன் பின்னர் அகற்றும் நிமித்தம் முன்னிறுத்திய வாகனங்களை பட்டியல்படுத்தி அந்த வாகனங்களை வகைப்படுத்தி அந்த வாகனங்கள் விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களா, அவற்றின் பதிவு சான்றிதழ்கள் உள்ளனவா என வினவி அந்த உரிய வாகனங்களின் பட்டியலை சமர்ப்பித்து அகற்றுவதற்கு பொருத்தமான வாகனங்களின் பட்டியல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பின்னர் அகற்றுவதற்கு பொருத்தமான அந்த வாகனங்கள் 01/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 13.2 ஆம் பந்தியின் நி. பி. கு. இலக்கம் 770 (4) (உ) இன் கீழ் அரச நிறுவனங்களில் உடைந்துள்ள வாகனங்களை பாவனையில் இருந்து அகற்றுவதற்கு உரிய வழிகாட்டல்களுக்கு இணங்க வகைப்படுத்த வேண்டிய மூன்று வகுதிகளுக்கு அமைய அந்த வாகனங்களை கண்டறிவதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் குழு நியமிக்கப்படும். மேலும் விவசாய திணைக்களத்தின் ஏறக்குறைய 250 நிறுவனங்கள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன. ஆகையால் அந்த வாகனங்களை மதிப்பிடுவதற்கான வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மதிப்பீட்டு குழுக்களுக்கு அதிக காலம் எடுக்கலாம். அதன் பின்னர் அகற்றுவதற்கு இனங்கண்டறிந்து மதிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் பட்டியல் அகற்றுவதற்கான

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	அனுமதியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு பொறுப்புக்கூறும் தலைமை அதிகாரியான கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படும். அதற்கு இணங்க அந்த அனுமதி கிடைத்தவுடன் மேற்குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வகுதிகளுக்கு இணங்க வாகனங்கள் வகைப்படுத்தப்பட்டு பட்டியல்படுத்தப்பட்டு கொள்வனவு செயன்முறைக்கு உரிய ஆவணங்கள் தொழில்நுட்ப குழுவினது சிபாரிசின் பேரில் விலை மதிப்பீட்டு பெறுமானத்திற்கு ஏற்ப விவசாய திணைக்களத்தின் கொள்வனவு குழுவுக்கு அல்லது பிராந்திய கொள்வனவு குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். எனவே கொள்வனவு குழுவின் அந்த அனுமதி கிடைத்த பின்னர் வாகனங்களை அகற்றும் பொருட்டு கேள்வி விலை மனுக்களை அழைப்பது தொடர்பாக செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும். அப்போது சுமார் 01 மாத காலம் வழங்கப்படும். அதற்கு இணங்க கேள்வி விலை மனுக்களை அழைத்து அந்த கேள்வி விலை மனுக்களை திறந்து வாகனங்கள் தொடர்பாக உரிய கொள்வனவாளர்கள் சமர்ப்பித்த பெறுமானங்கள் பட்டியல்படுத்தப்பட்டு மீண்டும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபாரிசுகளுக்கு இணங்க கொள்வனவு குழுவுக்கு அந்த வாகனங்கள் பட்டியல் சமர்ப்பிக்கப்படும். அதன்படி அந்த அனுமதி கிடைத்தவுடன் அகற்றப்படும் ஒழுங்குக்கு ஏற்ப முதலாவது கொள்வனவாளருக்கும், இரண்டாவது கொள்வனவாளருக்கும் மற்றும் மூன்றாவது கொள்வனவாளருக்கும் முறையே கடிதங்கள் அனுப்பப்பட்டு அகற்றல் செயல்முறை நிறைவு செய்யப்படும். குறித்த விடயங்களின் மீது கவனத்தை செலுத்தும் போது உரிய ஆண்டின் இறுதியளவில், உடைந்துள்ள வாகனங்களை அகற்றும் செயல்முறையை நிறைவு செய்ய தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். அகற்றல் செயல்முறை நிகழும் சந்தர்ப்பத்தில் தவிர்க்க இயலாத ஏதாவது தடைகள் ஏற்படுமாயின் அந்த காலம் மேலும் ஒரு மாதம் அளவுக்கு நீடிக்கப்படலாம்.
ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருந்திருந்தன.	அரசாங்க ஊழியர்களின் முற்பண கணக்குகளில் அறவிடுவதற்கு இருக்கின்ற, மரணித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற, ஓய்வூதியம் இல்லாமல் ஓய்வுபெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற, பணி நீக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற, சேவையில் இருந்து விலகி சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற, பன்முகப்படுத்தலின் கீழ் பல பிரிவுகளின் மூலம் இடமாற்றப்பட்டு இருந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற மற்றும் வெளிநாடு சென்று சேவையில் இருந்து விலகிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவைகளை அறவிடுவது தொடர்பில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கு நிதமும் கவனம் செலுத்தி அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்து, 2022.12.31 ஆம் திகதிற்கு ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் நிலுவையாக இருந்து வருகின்ற 80 உத்தியோகத்தர்களுக்கு உரிய ரூ. 4,139,802.23 தொகையில் 34 உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை மொத்தம் ரூ. 1,679,658.58 தொகையை 2024.07.31 ஆம் திகதிற்கு அறவிடுவதற்கு.நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் அறவிடுவதற்கு இருக்கின்ற 46 உத்தியோகத்தர்களுக்கு உரிய ரூ. 2,460,143.65 கடன் நிலுவையை அறவிடும் பொருட்டு தற்பொழுது கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

	வகை	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
1	மரணித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற நிலுவை (11)	02	• மரண பணிக்கொடையை பெற உரித்துடையவர்களுக்கு மரண பணிக்கொடைகள் செலுத்தப்பட்டுள்ளன. ஆயினும் நிதி இது வரை விடுவிக்கப்படவில்லை. நிதி விடுவிக்கப்பட்டதன் பின்னர் அறவிடுவதற்கு முடியும்.
		02	• தவணைக் கட்டண ரீதியில் அறவிடப்படுகின்றது.
		02	• 1/2024 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் பொருட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
		01	• கோவைகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
		04	• கேவைகளை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு கோவைகள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	2	ஒய்வு பெற்று சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற நிலுவை (05)	01 03 01	• கோவைகள் ஒய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. • கேவைகளை ஒய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு கோவைகள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. • உரிய நி. பி. கு. இன் பிரகாரம் ஒரு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.
	3	ஒய்வூதியம் இல்லாத ஊத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவை (02)	02	• சேவை காலம் போதாத காரணத்தினால் பணிக்கொடைக்கு உரித்தில்லை என்பதாலும் மற்றும் கடனை அறவிடுவதற்கு முயற்சி செய்யப்பட்டு இருந்தும் கடனாளி கடனை செலுத்தாததாலும் 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் பொருட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் அறவிடுவதற்கு சாத்தியம்
	4	பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவை	01	• இல்லை என்பதால் 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

		5	சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவை - (21)	03	• கடன் நிலுவைகள் தவைணக் கட்டணங்களின் அடிப்படையில் அறவிடப்பட்டு வருகின்றன.
				01	• கடன் நிலுவை தொடர்பாக தற்பொழுது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
				02	• புத்தகங்களிலில் இருந்து பதிவழிக்கும் பொருட்டு கமத்தொழில் அமைச்சின் செயலாளரின் ஊடாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபரும் அறிவுரைகளை வழங்கியுள்ளார். அதற்கு இணங்க 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
				09	• புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு அறிவுரைகள் கிடைத்துள்ளன. அதற்கு இணங்க 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்குரிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
				03	• சட்டமா அதிபரின் அறிவுரைகளுக்காக குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
				03	• கடனை அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கடனாளி கடனை செலுத்தாத காரணத்தினால்,

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

				1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
	6	சம்பளமற்ற லீவில் வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவை (03)	02 01	• கடனை அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கடனாளி கடனை செலுத்தாத காரணத்தினால், 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்குமாறு குறிப்பீடு செய்யும் பொருட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. • உத்தியோகத்தர்களின் பிணை வைப்பின் மூலம் கடன் நிலுவையை அறவிடும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	7	பன்முகப்படுத்தலின் கீழ் இடமாற்றப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு இருக்கின்ற கடன் நிலுவை (03)	01 01	• மேற்கொள்ளப்பட்டிருந்தும் கடனாளி கடனை செலுத்தாத காரணத்தினால், 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்குமாறு குறிப்பீடு செய்யும் பொருட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. • கடனாளி சுனாமி அனர்த்தத்தில் மரணித்துள்ளதால் 1/2024 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க புத்தகங்களில் இருந்து பதிவழிக்குமாறு குறிப்பீடு செய்யும் பொருட்டு அறிக்கைகள்

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

<table>
<tr><td></td><td><table><tr><td></td><td></td><td>01</td><td>தயாரிக்கப்பட்டு வருகின்றன.
• உத்தியோகத்தரின் பிணை வைப்பின் மூலம் அறவிடும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சரியான வதிவிடத்தை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.</td></tr><tr><td></td><td></td><td><u>46</u></td><td></td></tr></table></td></tr>
<tr><td>நி. பி. கு. இலக்கம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையை விஞ்சி சமயோசித கரும வசக்கட்டுநிதி விடுவிக்கப்பட்டு இருந்தது.</td><td>விவசாய திணைக்களம் நி. பி. கு. இலக்கம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையை விஞ்சி வசக்கட்டுநிதியை விடுவிக்கவில்லை.

எனினும் 2022 நிதி ஆண்டில் மெய்நிகர் தகவல் முறைமையினுள் தரவுகளை உள்ளீர்க்கும் போது, "நி. பி. கு. இலக்கம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையை விஞ்சி சமயோசித கரும பணி வசக்கட்டுநிதி விடுவிக்கப்பட்டு இருக்கவில்லையா?" என்ற கேள்விக்கு தவறுதலாக "இல்லை" என பதில்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அது சரி செய்யப்படுதல் வேண்டும். பதில் அனுப்ப வேண்டியது "ஆம்" என ஆகும்.</td></tr>
<tr><td>அனுமதிக்கப்பட்டுள்ள வரையறையை விஞ்சி பதவியணிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்தது.</td><td>விவசாய திணைக்களம் அனுமதிக்கப்பட்டுள்ள வரையறையை விஞ்சி பதவியணிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளவில்லை. பொது நிருவாக அமைச்சு 2020 ஆம் ஆண்டு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த பட்டதாரி பயிலுநர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி எண்ணிக்கையை கருத்திற் கொள்ளாமல் இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டதால் அந்த பதவியில் மேலதிக எண்ணிக்கை காணப்படுகின்றது. அந்த மேலதிக ஆளணியை அனுமதித்துக் கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது வரையில் அந்த அனுமதி கிடைக்கவில்லை.</td></tr>
</table>

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இரண்டாம் பாகம்: 80.00	
திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன.	நிருவாகப் பிரிவு 04 திணைக்களத்தின் நிருவாக விடயங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கின்றது. ஏனைய நிறுவனங்கள் நடத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்கின்றது. 2022 ஆம் ஆண்டின் வருடாந்த பயிற்சி திட்டத்திற்கு இணங்க 20 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டு இருந்த மற்றும் அந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்படாது இருந்த 24 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் /நிச்சயமற்ற மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் இருந்தது.	2022 நிதி ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்த கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அபிப்பிராயம் கீழ் மட்டத்தில் இருந்த்து.
சகல உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை செய்து இருக்கவில்லை.	விவசாய திணைக்களம் அதிகளவான பதவிநிலை அதிகாரிகளையும் மற்றும் சுமார் 260 பிரிவுகளையும் கொண்டுள்ள ஒரு திணைக்களமாகும். இந்த பதவிநிலை அதிகாரிகளில் சகல பணிப்பாளர்களினதும் அதே போல் நிருவாகப் பிரிவின் பதவிநிலை அதிகாரிகளினதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை மாத்திரம் நிருவாகப் பிரிவு 03 இற்கு பெற்றுக் கொள்ளும் நடைமுறை 2022 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை உரிய பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போல், பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகள் தொடர்பான விபரங்களை நிருவாகப் பிரிவு 03 இற்கு சமர்ப்பிக்குமாறு சகல பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

உச்ச சேவை காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை உரிய முறையில் இடமாற்றி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	இலங்கை விவசாய சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1183. சுமார் 384 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆகையால் 799 பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதன் காரணமாக, ஒரு சில விடயப்பரப்புகளின் நிமித்தம் விஷேடமாக வகைப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இருக்கின்றமை மற்றும் மருத்துவ காரணங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட வேண்டுகள்களை விடுத்துள்ளமை ஆகியவற்றின் காரணமாக, உத்தியோகத்தர்களை 5 வருடங்களுக்கு அதிக காலம் ஒரே பணி நிலையத்தில் பணியில் ஈடுபடுத்த நேர்ந்துள்ளமையையும் மற்றும் வருடாந்த இடமாற்றல் திட்டத்தை செயற்படுத்திய போது 5 வருடங்களுக்கு அதிக சேவை காலத்தையுடைய சகல உத்தியோகத்தர்களும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளமையையும் தயவுடன் அறியத் தருகின்றேன். அதே போல் 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த இடமாற்றல் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க, உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையின் காரணமாக இடமாற்ற முடியாதுள்ளதால் புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போது இடமாற்றம் செய்வது பொருத்தம் என்பதால் இடமாற்றல் குழு தீர்மானித்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போது, இடமாற்றம் செய்யும் பொருட்டு நிருவாகப் பிரிவுக்கு தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். இலங்கை விவசாய சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றல் நடைமுறையை மேலும் திருத்தத்திற்குட்படுத்தும் முகமாக அந்த நடைமுறை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். இலங்கை தொழில் நுட்ப சேவையில் விவசாய ஆலோசகர் (விஷேட) தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான ஒரு இடமாற்றல் நடைமுறை இருக்கவில்லை. தற்பொழுது இடாற்றல் நடைமுறை திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தின் நிமித்தம் 2023.06.19 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். இலங்கை தொழில் நுட்ப சேவையில் ஆராய்ச்சி உதவியாளர் (விஷேட) தர பதவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகள் 25. தற்பொழுது இந்த பதவியில் 5 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பணியாற்றுகின்றனர். செயல்நடைமுறை கோவையின் XVIII ஆம் பந்தியின் 250(II) ஆம் பிரிவுக்கு இணங்க, வருடாந்த இடமாற்றல் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	• உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை. • உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிலவுவதன் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்டளவான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அந்தந்த பணி நிலையங்களின் நாளாந்த அலுவலக கடமைகளை தடையின்றி கூடுமான ஆற்றலில் தொடர்ச்சியாக பேண நேர்ந்தமை. • ஒரு சில கஷ்டப் பிரதேச பணி நிலையங்களுக்கு பிரதியீட்டு உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியாமை மற்றும் அத்தகைய பணி நிலையங்களில் ஒரு சில உத்தியோகத்தர்கள் கஷ்டப் பிரதேச பணி நிலையங்களில் பணியாற்ற சம்மதம் தெரிவித்தமை. • மிகவும் கஷ்ட மற்றும் கஷ்ட பிரதேச பணி நிலையங்களுக்கு இடமாற்ற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாது இருந்தமை மற்றும் ஒரு சில விருப்பத் தெரிவுகள், பணி நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அதிகமாக கிடைத்தமை. • ஒவ்வொரு பணி நிலையத்தினதும் பொறுப்பு பணிகளும் மற்றும் பணி அவசியமும் கருத்திற் கொள்ளப்பட்டமை. • பிரிவு தலைவரின் / பணிப்பாளர்களின் சிபாரிசுகள் கருத்திற் கொள்ளப்பட்டமை. • 2022 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற முன்மொழிவை விவசாய ஆலோசகர் தொழிற்சங்கம் எதிர்த்தமையால் இரத்துசெய்ய நேர்ந்தமை. • 2023 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றத்தை 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளினும் அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள நேர்ந்தமை. அதன் போது சேவை காலம் 05 ஆண்டுகளை விஞ்சிய உத்தியோகத்தர்களினதும் மற்றும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கை அதிகளவில் இருந்தமை. ஆகையால், இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடைய சகல உத்தியோகத்தர்களையும் ஒரே வருடத்தினுள் இடமாற்றம் செய்வது செயன்முறை சாத்தியமற்றதாக இருந்தமை. எனவே, அதிக சேவை காலத்தையுடைய உத்தியோகத்தர்களுக்கும், கட்டாயமாக இடமாற்றம் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் மருத்துவ காரணங்களின் அடிப்படையில் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டமை. • மேலும், விவசாய ஆலோசகர்களின் 2022/2023 ஆம் ஆண்டுகளுக்கான இடமாற்றம் தொடர்பாக விவசாய ஆலோசகர்களின் தொழிற்சங்கம் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள CA/WRIT/471/2022 ஆம் இலக்க தடையாணை விண்ணப்பத்திற்கு கௌரவ

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் மூலம் அந்த ஆண்டுகளின் வருடாந்த இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை. வழக்கு விடயங்கள் 2024.02.02 ஆம் திகதி நிவைடைந்தமை மற்றும் 2022/2023 ஆம் ஆண்டுகளின் வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேல் நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிவுரைகள் ஏதும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இது வரையில் கிடைக்காத காரணத்தினால் குறித்த இடமாற்றத்தை செயற்படுத்த முடியாதிருந்தமை.

- 2022/2023 ஆம் ஆண்டுகளின் வருடாந்த இடமாற்றம் தொடர்பான வழக்குத் தீர்ப்பு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான இடமாற்றல் திட்டத்திற்கு அரசாங்க ஆணைக்குழுவின் அனுமதி 2024.01.22 ஆம் திகதி கிடைத்தமை ஆகியவற்றின் காரணமாக 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றலை மேற்கொள்ள முடியாது இருந்தமை.

- தற்பொழுது 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டுள்ளன. உரிய காலப் பகுதியினுள் வருடாந்த இடமாற்றத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை மேலும் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.

ஆகையால், சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் சட்டஏற்பாடுகளுக்கும் இணங்க உரிய இடமாற்றல் கால அட்டவணையின் பிரகாரம் திணைக்களம் விவசாய சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தை உரிய விதத்தில் செயற்படுத்தி இருந்தாலும், திணைக்களத்தின் நிருவாக விடயத்திற்கு அப்பால் வரும் விடயங்களின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் பின்னர் இது வரை விவசாய ஆலோசகர்களினது மாத்திரம் வருடாந்த இடமாற்றம் செயற்படுத்தப்படாததால், இவ்வாறு இடமாற்றம் செய்யப்படாத 05 ஆண்டுகளுக்கு அதிக சேவை காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் இருப்பதற்கு காரணமாக அமைந்துள்ளமையை தயவுடன் சுட்டிக் காட்டுவதற்கு விரும்புகின்றேன்.

ஒன்றிணைந்த சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படுவது ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளார் நாயகத்தினாலாகும் என்பதால் ஒரே பணி நிலையத்தில் 05 வருடங்களுக்கு அதிக காலம் பணியாற்றியுள்ள உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்களுக்கும் உரிய திணைக்களத்தின் வருடாந்த உள்ளக இடமாற்றல் திட்டம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் PSC/EST/07/04/13/01/2022 ஆம் இலக்க 2024.04.01 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2024.03.27 ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்கு அதிக காலம் ஒரே பணி நிலையத்தில் பணியாற்றியுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து உள்ளக இடமாற்றத்திற்கு விண்ணப்பங்களை அழைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	திணைக்களமயப்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கு (பண்ணை எழுதுநர், விவசாய செயற்பாட்டு உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர், விதைகள் தொழில்நுட்ப, விடுதிக் கட்டுப்பாட்டாளர் / முதுகுநர்) உரிய வருடாந்த உள்ளக இடமாற்றல் திட்டம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினது PSC/EST/07/04/13/01/2022 ஆம் இலக்க 2024.01.22 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2024.01.18 ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அதற்கு இணங்க 05 வருடங்களுக்கு அதிக காலம் ஒரே பணி நிலையத்தில் பணியாற்றியுள்ள உத்தியோகத்தர்களை உள்ளக ரீதியில் இடமாற்றம் செய்வதற்கு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டுள்ளன. மேலும், திணைக்களமயப்படுத்தப்பட்டுள்ள ஆரம்பநிலை திறன்கள் சாராத, ஆரம்பநிலை திறன்கள் சார்ந்த மற்றும் அரைத் திறன்கள் சார்ந்த வல்லுநர் (PL-01/PL-02 மற்றும் PL-03) சேவை வகுதிகள் தொடர்பான 2024 ஆம் ஆண்டிற்கு உரிய உள்ளக வருடாந்த இடமாற்றல் திட்டம் செயற்படுத்தப்பட்டது. எனினும் இந்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் காணப்படும் சேவையின் அவசியம், மேற்குறித்த பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை, பிரதியீட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பில் சீராக்கலை மேற்கொள்ளும் போது பிரச்சினைக்குரிய நிலைமைகள் எழுதல் மற்றும் ஒரு நிறுவனத்தினுள் 05 வருடங்களுக்கு அதிக சேவை காலத்தையுடைய சகல உத்தியோகத்தர்களையும் ஒரே தடவையில் இடமாற்றுவதால் நிறுவனத் தொழிற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வதில் பிரச்சினைகள் எழுகின்றமை முதலிய காரணங்களின் அடிப்படையில் உச்ச சேவை காலத்தை பூர்த்தி செய்த சகல உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யக் கூடிய வாய்ப்பு இருக்கவில்லை என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் முதலாம் பாகம்: 84.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	பிராந்திய அலுவலகங்களில் இருந்து தகவல்களை அழைத்து பதில்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் தாமதம் ஏற்படுவதால் அத்தகைய சந்தர்ப்பங்களில் நிலவுகின்ற நிலைமை தொடர்பாக அறிவித்து இடைக்கால பதில்கள் அனுப்பி வைக்கப்படுவதுடன் மேலதிக காலத்தை கோருவதற்கு அல்லது பதில்கககளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிலைமைகளை குறைத்துக் கொள்ளும் பொருட்டு குறித்த அறிக்கைகளை மின்னஞ்சலின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும், தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் Google Sheet தரவுகள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் பதிவாகி இருந்தன.	உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை சமர்ப்பிக்கும் போது அநேகமாக வழங்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆயினும் கால்நடைகள் ஆய்வு நிலையம் போன்ற பிராந்திய அலுவலகங்களில் இருந்து விபரங்களை அழைத்து பதில்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தாமதம் ஏற்படுவதால் அத்தகைய சந்தர்ப்பங்களில் நிலவுகின்ற நிலைமை தொடர்பாக அறிவித்து இடைக்கால பதில்கள் அனுப்பி வைக்கப்படுவதுடன் மேலதிக காலத்தை கோருவதற்கு அல்லது பதில்கககளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடத்தப்பட்டு இருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்குரிய கணக்காய்வு குழுக் கூட்டம் 2023.03.21 ஆம் திகதி அன்று நடத்தப்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டிற்கான அத்தகைய கணக்காய்வு குழுக் கூட்டம் 2023.10.03 ஆம் திகதி அன்று நடத்தப்பட்டுள்ளது. பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவியில் நிரந்தரமான ஒரு உத்தியோகத்தர் இல்லாததால் உரிய கூட்டங்களை உரிய முறையில் நடத்துவதற்கு முடியவில்லை என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான எல்லா வாகனங்களிலும் அரச சின்னங்கள் தற்பொழு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
ஒரு வாகனம் செயலிழந்து 08 மாதத்திற்கு குறைந்த ஒரு காலப் பகுதியினுள் அகற்றப்பட்டு இருக்கவில்லை.	2023ஆம் ஆண்டு தொடர்பான அகற்றல்கள் மேற்கொள்ளப்படவுள்ள வாகனங்கள் தொடர்பாக 02/2015 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.
ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருந்திருந்தன.	i. **திருமதி டீ. எஸ். பி. அமரசேன** - இந்த உத்தியோகத்தர் சுகயீனம் காரணமாக சேவைக்கு அறிக்கையிடும் நிலைமையில் இல்லை என்பதால் அந்த சுகயீனத்திற்கான மருத்துவ காரணங்களின் அடிப்படையில் அவரை ஓய்வுபெறச்செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ii. **திரு ஏ. எம். எஸ். பீ. திஸாநாயக்க** - இந்த உத்தியோகத்தர் 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் சேவையை விட்டும் விலகிச்சென்றுள்ளார். இவரின் கடன் நிலுவை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை அறியத்தர விரும்புகின்றேன். மேலும் இந்த உத்தியோகத்தர்கள் 10 ஆண்டுகளுக்கு அதிக காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் என்பதால் பிணை உத்தரவாதிகள் இல்லாமல் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.
சேகரித்து இருந்த வருமானம் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டோ அல்லது அவை வைப்பு கணக்குகளில் பிடித்து வைக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்கு குறையாத ஒரு காலப் பகுதியினுள் வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டோ இருக்கவில்லை.	வாடிக்கையாளர்கள் நேரடியாக வைப்பு செய்திருந்த பணங்கள் வைப்புக் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டதன் பின்னர் அவை கண்டறியப்பட்டு வருமானத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இரண்டாம் பாகம்: 71.00	
நிறுவனத்தின் பிரஜை / வாடிக்கையாளர் சமவாயத்தை செயற்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு தேவையான ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	நிறுவனத்தின் பிரஜை / பிரஜை சேவை சமவாயத்தைத் தயாரித்து தற்பொழுது திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரஜை / பிரஜை சேவை சமவாயம் காட்சிப்படுத்தப்படவுள்ளது. ஆகையால் அது தொடர்பான மேற்பார்வையின் நிமித்தம் ஒவ்வொரு பிரிவினதும் பணிப்பாளர் பிரதிநிதிப்படுத்தும் வகையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் /நிச்சயமற்ற மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் இருந்தது.	2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயமாக காணப்படுகின்றது. கணக்காய்வு அபிப்பிராயம் நிச்சயமற்ற அல்லது பாதக மட்டத்தில் வெளிப்படுத்தப்படவில்லை.
சகல உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை செய்து இருக்கவில்லை.	இந்தத் திணைக்களத்தின் 2023.06.30 ஆம் திகதிற்கான சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை பெற்றுக் கொள்ள வேண்டிய 149 உத்தியோகத்தர்கள் உள்ளனர். இந்த உத்தியோகத்தர்களில் 102 உத்தியோகத்தர்கள் தற்பொழுது அவர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை செய்துள்ளனர். சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை செய்யாத உத்தியோகத்தர்களுக்கு அந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

உச்ச சேவை காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை உரிய முறையில் இடமாற்றி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்தில் 06 வருடங்கள் சேவை காலத்தை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் இடமாற்றல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சேவை அவசியத்தின் பேரில் இடமாற்றம் செய்யக்கூடாது என இடமாற்றல் குழுவுக்கு விண்ணப்பிக்காத உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய எல்லா உத்தியோகத்தர்களையும் வருடாந்தம் இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் கீழ்காணும் விடயங்களின் காரணமாக திணைக்களத்தில் 06 வருடங்களுக்கு அதிக கால சேவையை நிறைவு செய்துள்ள சகல உத்தியோகத்தர்களையும் உரியவாறு இடமாற்றுவது கடினடாக மாறியுள்ளது. • இடமாற்றலை செயற்படுத்தும் பொருட்டு பொருத்தமான பிரதியீட்டு உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமை (இந்தத் திணைக்களம் ஒரு தொழில் நுட்பத் திணைக்களம் என்பதால்) • அன்று ஆரம்ப திறன் சேவை வகுதியில் ஆய்வுகூட உதவியாளர் பதவிற்கும் திணைக்களத்தின் சாரதிகளுக்கான உள்ளக இடமாற்றல் திட்டம் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை (இது வரை வருடாந்த இடமாற்றல் திட்டம் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது). • வருடாந்தம் இடமாற்றம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் இடமாற்றத்தை சீராக்குவதற்கு உரிய பணி நிலையத்திற்கு விண்ணப்பித்திருந்த உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமை. • இடமாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் வருடாந்த இடமாற்றத்தின் நிமித்தம் அண்மித்துள்ள பணி நிலையத்திற்கு இடமாற்றத்திற்கு உள்ளாகும் மிகவும் அண்மித்துள்ள பணி நிலையத்தின் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணியில் உள்ள ஆளணி எண்ணிக்கையின் அடிப்படையில் இடமாற்றத்தை செய்ய நேர்ந்தமை.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் முதலாம் பாகம்: 86.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	**குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	"எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை" என்ற வியடத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. 5 கணக்காய்வு விசாரணைகள் தவிர ஏனைய சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்கு குறைந்த காலப் பகுதியில் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டு பதில்களை ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்த மிகை, பற்றாக்குறை ஆகியன தொடர்பான சிபாரிசுகளும் மற்றும் ஏனைய சிபாரிசுகளும் உரிய காலப் பகுதியினுள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	பொருட்கள் கணக்கெடுப்புகளை நிறுவனத்திலும் மற்றும் அலுவலகங்களிலும் அதிகளவில் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதில் கடினமாக இருந்ததன் அடிப்படையில் உரிய காலப் பகுதியிலேயே சகல கரும பணிகளையும் மேற்கொள்ள முடியாது இருந்தாலும் 2022.6.30 ஆம் திகதிற்கு முன்னர் சகல கரும பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. உரிய காலப் பகுதியினுள் அத்தகைய கருமங்களை நிறைவேற்றுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
சகல வாகனங்களினதும் உரித்துக்களை உறுதி செய்கின்ற ஆவணங்கள் உடமையில் இருக்கவில்லை.	சகல வாகனங்களினதும் உரித்தை உறுதி செய்கின்ற ஆவணங்கள் உடமையில் இருக்கவில்லை. மேற்குறித்த விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தத் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் உரித்தை உறுதி செய்கின்ற ஆவணங்கள் (வாகனங்களின் பதிவுப் புத்தகங்கள்) நிருவாகப் பிரிவில் உள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம் ஒரு செலவின தலைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிதியேற்பாடுகளில் நிதிகளை உபயோகித்த பின்னர் ஆண்டு இறுதியில் எஞ்சி இருந்த நிதியின் வரையறையை விஞ்சும் வகையில் பொறுப்புக்களுக்கு உள்ளாகி இருந்திருந்தது.	நி. பி. கு. இலக்கம் 94(1) இற்கு இணங்க நிதி வரையறையை விஞ்சும் வகையில் பொறுப்புக்களுக்கு உள்ளாகக் கூடாது என உரிய அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரிய முறையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிப்பதற்கு தேவையான விபரங்களை சேகரிக்கும் போது உரிய தினத்தில் அந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு விரைவில் சமர்ப்பிப்பது அவசியம் என்பதால் RDD/04/04/කා.සා.වා./2022/1 ஆம் இலக்க 2023.05.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு அத்தியட்சகரிடம் இருந்து கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை கோரப்பட்டுள்ளது. எனினும், 2023 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2024.05.30 ஆம் திகதி திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதால் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையையும் 2024.05.31 ஆம் திகதிற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை. ஆகையால் 2024 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கையை 2025.03.31 ஆம் திகதியளவில் கிடைக்கச்செய்யுமாறு கோரி அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகருக்கு ஒரு கடிதத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

D.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இரண்டாம் பாகம்: 99.00	
திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன.	2022 ஆம் ஆண்டின் முதல் 6 மாத காலப் பகுதியினுள் கொரோனா தொற்று நோய் நிலமை இருந்ததால் நபர்களை ஒன்றுகூட்டுவதற்கு சுகாதார சேவைகள் பிரிவு நிபந்தனைகளை விதித்து இருந்தது. அதனால், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தக் கூடிய வாய்ப்பு இல்லாதிருந்தது. அதன் காரணமாக, திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டாது இருந்தமை திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி சந்தர்ப்பங்களில் இருந்து வழங்கி இருந்த வாய்ப்புகளின் அளவு 50% வீதத்திற்கு குறைவாக இருந்தமைக்கு காரணமாகும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் முதலாம் பாகம்: 90.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க பொது கணக்குகள் பற்றிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச ஊழியர்களின் சம்பளத்தை தயாரிக்கும் கணனி மென்பாகத்திற்கான கடவுச்சொல் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்தின் சம்பளத்தை தயாரிக்கும் மென்பாகமான Pay Roll மென்பாகத்தின் கடவுச்சொல்லை தற்பொழுது 171/2004 ஆம் இலக்க பொது கணக்குகள் பற்றிய சுற்றறிக்கையினது ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய முறையில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.
கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டு தொடர்பாக, கணக்காய்வாளர் நாயகத்தின் 19 கணக்காய்வு விசாரணைகள் கிடைத்துள்ளன. அவற்றில் 08 கணக்காய்வு விசாரணைகளுக்கு 03 மாதங்களுக்குள் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளள. தலைமை அலுவலகத்தின் மூலம் திணைக்களத்தின் பல நிறுவனங்களில் இருந்து பதில்களை அழைத்து அரசாங்க கணக்காய்வுக்கு பதில்கள் வழங்கப்படுகின்றன. அதன் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.
வாகன கொட்டகையில் உள்ள வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் சுருக்க அறிக்கைகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	2022 நிதியாண்டிற்கான அனைத்து மாதாந்த வாகன ஓட்டக் குறிப்புகளும் மற்றும் சுருக்க அறிக்கைகளும் உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2022.10.11, 2023.02.08, 2023.05.03, 2023.07.19 மற்றும் 2023.12.27 ஆம் திகதிகளில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் அத்தகைய குறிப்புகளும் அறிக்கையும் அரசாங்க கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை.	தற்போது அனைத்து வாகனங்களுக்கும் உரிய அரச சின்னங்கள் நிறம் பூசப்பட்டுள்ளன.
ஒரு வாகனம் செயலிழந்து 08 மாதத்திற்கு குறைந்த ஒரு காலப் பகுதியினுள் அகற்றப்பட்டு இருக்கவில்லை.	நாட்டில் நிலவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக வாகன அகற்றல் நடவடிக்கையை நிறைவு செய்ய முடியவில்லை என்பதை குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். எனினும் தற்போது ஒரு விற்பனை விலை மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
வங்கி இணக்கல் கூற்றுக்கள் உரிய தினத்திற்கு தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	வங்கி கிடைப்பனவு பற்றுச்சீட்டுக்களை சரியாக இனங்கண்டறிந்த பின்னர் அவற்றை அட்டுறு செய்ய வேண்டும் என்பதால் மாவட்ட உதவி பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து பற்றுச்சீட்டுக்கள் தாமதமாக கிடைப்பதால் உரிய நேரத்தில் வங்கி இணக்கல் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க முடியாது போயுள்ளது. மேலும் ஏற்றுமதி விவசாய பயிர்கள் அபிவிருத்தி கருத் திட்டத்தின் கீழ் இந்த கணக்குக்கு உரிய மாவட்டத்தின் உதவி பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக நன்மைபெறுநர்கள் நேரடியாக வங்கி கணக்குக்கு வரவு வைக்கின்றனர். அவ்வாறு அவர்கள் வரவு வைக்கும் வைப்புக்கள் தொடர்பான வைப்பு பத்திரங்கள் உதவி பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன் பின்னர் அந்த பற்றுச்சீட்டுக்கான பற்றுக்கு சிறாப்பர் மூலம் கிடைப்பனவு பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. இவ்வாறு அந்த வைப்பு பத்திரங்களை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் போது அவற்றை உரிய முறையில் இனங்கண்டறிந்த பின்னர் வருமானத்திற்கு வரவு வைக்கும் போது, ஏற்படும் தாமதத்தின் காரணமாக இவ்வாறு வங்கி இணக்கல் கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அத்தகைய தாமதங்கள் நிகழாதிருக்கும் வகையில் நடந்து கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

P.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இரண்டாம் பாகம்: 83.00	
2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய முறையில் தயாரிக்க வேண்டிய ஒரு மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	புதிதாக கொரோனா நோய் தொற்றியதால் நாடு முழுதிலும் பொலிஸ் ஊரடங்கு சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு இருந்தன. சகல அரச ஊழியர்களும் தத்தமது வீடுகளில் இருந்து கொண்டு தமது கடமைப் பணிகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி செயலக அலுவலகம் 2020.03.26 ஆம் திகதி வெளியிட்டுள்ள பிஎஸ்/சிஎஸ்ஏ/சுற்றறிக்கை/17/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்ததால் அரச அலுவலகங்களின் கடமைப் பணிகளை மட்டுப்படுத்த நேர்ந்தது. தகவுடைய அதிகாரிகளும் மற்றும் அத்தியாவசிய உதவி உத்தியோகத்தர்களும் மட்டுமே அலுவலங்களுக்கு தமது பணிகளின் நிமித்தம் அறிக்கையிட்டனர். அதன் காரணமாக 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்கு உரிய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை உரிய முறையில் தயாரிக்க முடியவில்லை. தற்பொழுது அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய பயிற்சி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தயாரிக்கப்பட்டு இருந்த மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பதவியணியில் நூற்றுக்கு 50 வீதத்திற்கு அதிகமான ஊழியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கள் உறுதி செய்யப்பட்டு இருக்கவில்லை.	10/2020 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகளவில் அரசாங்க உத்தியோகத்தர்களும் மற்றும் பொது மக்களும் ஒன்றுகூடும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கூட்டங்கள் என்பவற்றை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்ததாலும் மற்றும் பொ. நி. சு. 07/2022, 08/2022, 09/2022, 10/2022, 13/2022, 15/2022, 16/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைகளில் உள்ள அறிவுரைகளுக்கு இணங்க கடுமையான மட்டுப்பாடுகள் இருந்ததாலும் உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் நிமித்தம் திட்டமிடப்பட்டு இருந்த (வினைத் திறன் தடைகாண் பரீட்சைகள் தொடர்பான பயிற்சிகள்) பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியவில்லை. 2023 ஆம் ஆண்டிற்கு உரிய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	புதிதாக கொரோனா நோய் தொற்றியதால் நாடு முழுதிலும் பொலிஸ் ஊரடங்கு சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு இருந்தன. சகல அரச ஊழியர்களும் தத்தமது வீடுகளில் இருந்து கொண்டு தமது கடமைப் பணிகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி செயலக அலுவலகம் 2020.03.26 ஆம் திகதி வெளியிட்டுள்ள பிஎஸ்/சிஎஸ்ஏ/சுற்றறிக்கை/17/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்ததால் அரச அலுவலகங்களின் கடமைப் பணிகளை மட்டுப்படுத்த நேர்ந்தது. தகவுடைய அதிகாரிகளும் மற்றும் அத்தியாவசிய உதவி உத்தியோகத்தர்களும் மட்டுமே அலுவலங்களுக்கு தமது பணிகளின் நிமித்தம் அறிக்கையிட்டனர். அதன் காரணமாக 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்கு உரிய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை உரிய முறையில் தயாரிக்க முடியவில்லை. பதவியணியின் ஒட்டுமொத்த ஊழியர்களினாலும் குறித்த செயலாற்றுகை ஒப்பந்தங்களுக்கு உள்ளாக முடியவில்லை.
திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன.	10/2020 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகளவில் அரசாங்க உத்தியோகத்தர்களும் மற்றும் பொது மக்களும் ஒன்றுகூடும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கூட்டங்கள் என்பவற்றை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்ததாலும் மற்றும் பொ. நி. சு. 07/2022, 08/2022, 09/2022, 10/2022, 13/2022, 15/2022, 16/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைகளில் உள்ள அறிவுரைகளுக்கு இணங்க கடுமையான மட்டுப்பாடுகள் இருந்ததாலும் உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் நிமித்தம் திட்டமிடப்பட்டு இருந்த (வினைத் திறன் தடைகாண் பரீட்சைகள் தொடர்பான பயிற்சிகள்) பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியவில்லை. 2023 ஆம் ஆண்டிற்கு உரிய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் /நிச்சயமற்ற மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் இருந்தது.	இந்த ஆண்டிற்கு உரிய நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பில் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் முதலாம் பாகம்: 77.00	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	**குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
பொது கணக்குகள் திணைக்களம் வெளியிட்டுள்ள 2022.12.13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க வழிகாட்டியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியூல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.	2022.12.13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க பொது கணக்குகள் திணைக்களத்தினது வழிகாட்டியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் ***சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின்*** நிலையான சொத்துக்கள் மொடியூல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப் படுகின்றது. ஆகையால், தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் உரிய சுற்றறிக்கையினது ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் பேணப் படுகின்றன.
அவதான பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.	அவதான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இற்றைப்படுத்துவது தொடர்பாக செயன்முறையில் ஒரு சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. உரிய பிரச்சினைகளை தீர்த்த பின்னர் இற்றைப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டு இருந்த எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமாப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	நாடு முழுதிலும் பரந்து காணப்படுகின்ற 562 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மக்களுக்கு சேவையை வழங்குகின்றது. மாவட்ட அலுவலகங்களுக்கும் மற்றும் கமநல சேவை நிலையங்களுக்கும் உரிய மாவட்டத்தின் கணக்காய்வு அதிகாரியின் மூலம் கணக்காய்வுகள் செய்யப்பட்டு கணக்காய்வு விசாரணைகள் முன்வைக்கப்படுகின்றன. இது தவிர தலைமை அலுவலகத்தின் கணக்காய்வு பிரிவின் மூலமும் உரிய மாவட்ட அலுவலகங்களுக்கும் மற்றும் கமநல சேவை நிலையங்களுக்கும் கணக்காய்வுகள் செய்யப்பட்டு கணக்காய்வு விசாரணைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வாறு குறிப்பீடு செய்யப்படும் சகல கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான உரிய விளக்கங்களையும் மாவட்ட அலுவலகங்களில் இருந்தும் மற்றும் உரிய கமநல சேவை நிலையங்களில் இருந்தும் பெற்றுக் கொண்டு இறுதிப் பதில்களை கோவைப்படுத்த வேண்டும். ஒரு சில கணக்காய்வு விசாரணைகளுக்கு தேவையான விளக்கங்களை பெற்றுக் கொண்டு இறுதி பதில்களை தயாரித்து வழங்குவதை, வழங்கப்பட்டுள்ள காலப் பகுதியினுள் நிறைவேற்றுவது செயன்முறை ரீதியில் அவ்வளவு சாத்தியம் இல்லை என்பதால் பதில்களை வழங்குவதில் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் தற்பொழுது இறுதிப் பதில்களை பெற்றுக் கொள்ள தாமதமாகியுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய பதில்களை தயாரித்து வழங்க முறையான ஒரு முறையியல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அந்த முறையியல் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதை நான் அறியத் தருகின்றேன். ஆகையால், 2024.10.30 ஆம் திகதிற்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைத்த மொத்த கணக்காய்வு விசாரணைகளுக்கு இறுதிப் பதில்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கும் முன்னேற்றம் அடங்கிய சுருக்க விபரம் பின்வருமாறு காணப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

திணைக்களத்திற்கு கிடைத்த கணக்காய்வு விசாரணைகள்		2024.10.30 ஆம் திகதிற்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை	பதில்கள் வழங்கப்படவுள்ள கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை		
ஆண்டு	கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை		அறிவிடுவதற்கும் செலுத்துவதற்கும் உள்ள நிலுவைகள் தொடர்பான கணக்காய்வு விசாரணைகள்	ஏனைய கணக்காய்வு விசாரணைகள்	மொத்தம்
2019	129	124	5	0	5
2020	110	108	2	0	2
2021	118	117	0	1	1
2022	219	217	1	1	2
2023	54	54	0	0	0
2024	30	26	0	4	4
மொத்த தொகை	**660**	**646**	**8**	**6**	**14**

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

உள்ளக கணக்காய்வு விசாரணைகளின் நிமித்தம் ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	பிரதான உள்ளக கணக்காய்வாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்படும் உள்ளக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எடுக்கப்படும் விடய நடவடிக்கைகளை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் மாவட்டத்திற்கு பொறுப்பு உடைய பிரதி ஆணையாளர்களுக்கு / உதவி ஆணையாளர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த உள்ளக கணக்காய்வு அறிக்கை மாவட்டத்திற்கு பொறுப்பு உடைய பிரதி ஆணையாளருக்கு / உதவி ஆணையாளருக்கு கிடைத்த பின்னர் அந்த அறிக்கையில் உள்ளடங்கி இருக்கும் விடயங்கள் தொடர்பில் விளக்கங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அந்த அறிக்கை உரிய கமநல சேவை நிலையத்திற்கு பொறுப்பு உடைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அறிக்கை தொடர்பாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தயாரித்து வழங்கும் பதில்களை மாவட்டத்திற்கு பொறுப்புடைய பிரதி ஆணையாளர்களின் / உதவி ஆணையாளர்களின் சிபாரிசுகளை உள்ளடக்கி அவர்களின் கையொப்பத்துடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் செயன்முறையின் நிமித்தம் ஒரு மாதத்திற்கும் அதிக காலம் எடுக்கும் என்பதால், அத்தகைய நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்ளின் போதும் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் போதும் அது பற்றி கவனம் செலுத்தப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.
வாகன கொட்டகையில் உள்ள வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் சுருக்க அறிக்கைகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	வாகன கொட்கையில் உள்ள வாகனங்கள் தொடர்பாக உரிய நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளும் கிடைக்கும் மாதத்தின் 15 ஆம் திகதிற்கு முன்னர் அந்த குறிப்புகளையும் அறிக்கைகளையும் கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
எல்லா வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களில் அரச சின்னத்துடன் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு இருந்தன. காலாவதியாகிய காரணத்தினால் அந்த ஸ்டிக்கர்கள் மங்கி அழிந்து போயுள்ளன. அரச சின்னத்திற்கு நிறம் தீட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

ஒரு வாகனம் செயலிழந்து 08 மாதத்திற்கு குறைந்த ஒரு காலப் பகுதியினுள் அகற்றப்பட்டு இருக்கவில்லை.	13 வாகனங்களை அகற்றும் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன. கமநல அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பாக ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப் பட்டுள்ள 10 வாகனங்களுக்கான பதிவு சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் இல்லாததால் உரிமையை உறுதி செய்து கொள்ள இயலாது இருந்த காரணத்தினால் அகற்றல் பணிகளை மேற்கொள்ள முடியாது போயுள்ளது. ஆகையால், குறித்த வாகனங்களின் மூலப் பிரதிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக கறுவாதோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. எனவே, அந்த முறைப்பாட்டின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அந்த வாகனங்களின் பதிவு சான்றிதழ்களின் இணைப் பிரதிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போல் கமநல அபிவிருத்தி ஆணையாளரின் பெயரில் பதிவு செய்யப் படாதுள்ள 15 வாகனங்களை உரிமை மாற்றி பெற்றுக் கொள்ளும் பொருட்டு (தற்பொழுது மூடப்பட்டுள்ள நிறுவனம்) 2018.10.10 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிமை மாற்றி பெற்றுக் கொள்ள கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் மூலம் வாய்ப்பு இருப்பதால் அந்த வாகனங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. உரிய அறிவுரைகளின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகையால், உரிய பிரச்சினையை தீர்த்த பின்னர் 2024 ஆம் ஆண்டில் வாகனங்களை அகற்றும் பொருட்டு ஒரு விஷேட மதிப்பீட்டுக் குழுவை நியமித்து முறையான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக உரிய நி. பி. கு. இன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	கீழ்காணும் வாகனங்கள் தொடர்பாக நி. பி. கு. இலக்கங்கள் 103 ,104 ,109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. **53-9816** - இந்த வாகன விபத்து தொடர்பாக புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 2704/எம் இலக்க வழக்கு 2021.02.18 ஆம் திகதி நிறைவடைந்துள்ளது. நட்டமாக திணைக்களம் கணிப்பிட்டு கோரியிருந்த 149,750.00 ரூபா நஷ்டஈட்டு தொகையை A/24 716613 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் 2021.02.16 ஆம் திகதி புத்தளம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்திற்கு வழக்கின் பிரதிவாதியான செய்னுல் ஆப்தீன் மொஹமட் சியாத் என்பவர் செலுத்தியுள்ளார். **PB-5280** - இந்த வாகன விபத்து தவிர்க்க முடியாத ஒரு விபத்தாகும். ஆகையால் நட்டம் வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள ஒரு நட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே நி. பி. கு. இலக்கம் 109 இன் பிரகாரம் குறித்த நட்டத்தை கணக்குப் புத்தகத்தில் இருந்து பதிவழிக்க உரங்கள் பிரிவின் சிபாரிசுகளுடன் உரிய ஆவணங்கள் கிடைத்த பின்னர், குறித்த நட்டத்தை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். **250-2078** - 2015.11.24 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க அனுராதபுர கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தில் இருந்து நி. பி. கு. இலக்கம் 104 (3) இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையும் மற்றும் நி. பி. கு. இலக்கம் 104 (4) இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையும் கிடைத்துள்ளன. இது தொடர்பாக மேலும் நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு நி. பி. கு. இலக்கம் 109 இன் பிரகாரம் நட்டத்தை கணக்குப் புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கு உரிய ஆவணங்கள் உரங்கள் பிரிவின் சிபாரிசுகளுடன் கிடைத்த பின்னர் குறித்த நட்டத்தை கணக்குப் புத்தகத்தில் இருந்த பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். **53-9830 -** இது தொடர்பாக சட்டமா அதிபரின் திணைக்களத்தின் மூலம் ஒரு நஷ்டஈட்டு வழக்கை தாக்கல் செய்ய தேவையான விடயங்களை நிறைவேற்றி தருமாறு கோரி 7/1/2/32/1 ஆம் இலக்க 2013.12.12 ஆம் திகதிய கடிதம் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் (குருனாகல்) மூலம் ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க குருனாகல் மாவட்ட நீதிமன்றத்தில் 15/MD ஆம் இலக்க வழக்கின் மூலம் இந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குருனாகல் மாவட்ட நீதிமன்றத்தில் பதியப்பட்டுள்ள 15 / MD ஆம் இலக்க வழக்கின் இரண்டாவது பிரதிவாதியாகிய வ/ப கூட்டுறவு காப்புறுதி கூட்டுத்தாபனம் ரூ.51,750 தொகையை செலுத்த உடன்பட்டுள்ளது. அந்த தொகையை பெற்றுக் கொண்டு வழக்கை முடிவுறுத்த கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் இணக்கம் தெரிவித்துள்ளார். ஆகையால் தற்பொழுது குறித்த வழக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Ro
Battaramulla.

வங்கி இணக்கல் கூற்றுக்களில் இருந்து தெரிய வந்த சீராக்க வேண்டி இருந்த நிலுவை உரிய நி. பி. கு. இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	வங்கி இணக்கல் கூற்றுக்களில் இருந்து தெரிய வந்த இணக்கல் செய்ய வேண்டி இருந்த நிலுவைகளை உரிய நி. பி. கு. இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கு அதிக காலம் முதல் இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருந்திருந்தன.	காலம் முடிவடைந்த கடன் நிலுவைகளை அறவிடும் பொருட்டு உரிய தரப்புகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் அறியப்படுத்தி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கணிசமான கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போல் மூலங்களை இனங்கண்டு கொள்ள முடியாத அல்லது எந்த விதத்திலும் அறவிடுவதற்கு முடியாத கடன் நிலுவைகளை கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் பொருட்டு நிதி அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
பொது வைப்பு கணக்கில் காலம் முடிவடைந்து இருந்த வைப்புக்கள் தொடர்பில் நி. பி. கு. இலக்கம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	பொது வைப்பு கணக்கில் உள்ள காலம் முடிவடைந்த வைப்புக்களை, திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தில் இருந்து வசக்கட்டு நிதி கிடைப்புக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பனவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வசக்கட்டு நிதி கிடைப்புக்கு ஏற்ப எதிர்காலத்தில் அத்தகைய வைப்புக்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
நி. பி. கு. இலக்கம் 371 இன் பிரகாரம் வழங்கிய சமயோசித வசக்கட்டுநிதி கருமம் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசுகளுக்கு இணங்க நி. பி. கு. இலக்கம் 371 இற்கு இணங்க வழங்கிய சமயோசித கரும வசக்கட்டு நிதியை தீர்ப்பனவு செய்வது தொடர்பாக ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய கரும விடயம் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

இரண்டாம் பாகம்: 36.00	
நிறுவனத்தில் நிருவகிக்கப்படும் இணைத் தளத்தின் மூலம் பொது மக்கள் முறைப்பாடுகளை செய்வதற்கு அல்லது பாராட்டு குறிப்புகளை இடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கவில்லை.	➢ இந்த திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை நிர்மாணித்த போது அதில் வழமையான தகவல்களை இற்றைப் படுத்துவதற்கு மாத்திரம் அது திட்டமிடப்பட்டுள்ளது. ➢ கணக்காய்வாளர் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களை செயற்படுதும் பொருட்டு அதிகளவான நிதியும் மற்றும் காலமும் செலவாகும் என்பதால் ,www.agrariandepat.lk திணைக்கள இணையத் தளத்தில் பிரசுரித்த ஒரு இணைப்பின் மூலம் www.agrarian.lk இணையத் தளத்தில் திறக்கும் ஒரு இணையத் தளப் பக்கத்தில் பொது மக்கள் அவர்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ➢ மேலும் இலஞ்ச ஊழல் மோசடி செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்கள் முறையிடுவதற்கு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் முகவாயிலில் பொது மக்கள் முறையீடுகளை இடுவதற்கான ஒரு பாதுகாப்பான பெட்டி வைக்கப்பட்டுள்ளது.
2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்திய 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரஜை / வாடிக்கையாளர் சமவாயம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை	பிரஜை / வாடிக்கையாளர் சமவாயம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த சமவாயம் நிறுவனத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

நிறுவனத்தின் பிரஜை / வாடிக்கையாளர் சமவாயத்தை செயற்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு தேவையான ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	பிரஜை / வாடிக்கையாளர் சமவாயத்தை செயற்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு தேவையான ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய முறையில் தயாரிக்க வேண்டிய ஒரு மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

தயாரிக்கப்பட்டு இருந்த மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பதவியணியில் நூற்றுக்கு 50 வீதத்திற்கு அதிகமான ஊழியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கள் உறுதி செய்யப்பட்டு இருக்கவில்லை. திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50% வீதத்திற்கு குறைந்த அளவில் இருந்தன.	இந்தத் திணைக்களத்தில் விசாரணைப் பிரிவு, பயிற்சிப் பிரிவு மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு ஆகிய சகல பிரிவுகளும் மனித வளங்கள் ஆணையாளரின் கீழ் இயங்கின. பிரிவுகளுக்கான இந்தப் பதவி இலங்கை நிருவாக சேவையில் முதலாம் தர பதவி ஒன்றாகும். எனினும் முதலாம் தரத்தில் அதிகாரி ஒருவர் இல்லாதிருந்த காரணத்தினால் அந்த காலப் பகுதியினுள் நிருவாக சேவையில் இரண்டாம் தரத்தில் உள்ள ஒரு அதிகாரியை ஈடுபடுத்தி கடமைப் பணிகள் அணவப்பட்டன. இந்த காலப் பகுதியினுள் நாடு முழுதிலும் பரந்திருந்த சுமார் 13,620 ஊழியர்களை உடைய பதவியணியின் அனைத்து நிறுவன விடயங்களும் அதாவது, ➢ பதவியணிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல் ➢ பதவியுயர்வுகளை வழங்குதல் ➢ பதவியில் நிரந்தரமாக்கல் ➢ பதவி வெற்றிடங்களை முகாமை செய்யும் விடயங்கள் ➢ தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் தனியாள் கோவைகளை பேணுவது தொடர்பான பதவியணி விடயங்கள் முதலிய கரும விடயங்களுக்கு மேலதிகமாக நாடு முழுதிலும் உள்ள பதவியணிகளின் விசாரணை விடயங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதும் மற்றும் அந்த விடயங்களுடன் தொடர்புடைய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த கால கட்டத்தில் முக்கிய கரும பணியாக விளங்கின. இந்த விசாரணைகளையும் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளையும் பயிற்சி பெற்ற அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் தாமதித்தமையும் மற்றும் ஒரு சில ஒழுக்காற்று விசாரணைகளுக்கும் சாதாரண விசாரணைகளுக்கும் சுமார் ஐந்து வருட காலம் எடுத்தமையும் அவதானிக்கப்பட்டது. அந்த ஒழுக்காற்று விசாரணைகளும் மற்றும் சாதாரண விசாரணைகளும் முடிவடையாத காரணத்தினால் உத்தியோகத்தர்களில் அதிகமானோரை சேவையில் நிரந்தரமாக்குதல் மற்றும் ஓய்வுபெறுதல் ஆகிய விவகாரங்கள் பிரச்சினையாக இருந்தன.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

	ஆகையால் பயிற்சி வாய்ப்புகளின் நிமித்தம் நிதி ஒதுக்கப்பட்டாலும், பயிற்சிப் பிரிவின் பொறுப்பை உரிய முறையில் ஒப்படைப்பதற்கு தகுதி வாய்ந்த ஒரு உத்தியோகத்தர் இல்லாததாலும் மற்றும் பதவியணியில் ஓய்வுபெறச்செய்வதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய காலம் தாமதித்திருந்ததாலும் அந்த கடமைப் பணிகளின் நிமித்தம் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் மொத்த உத்தியோகத்தர்களையும் உச்சளவில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் நிமித்தம் போதிய காலமும் மற்றும் ஆற்றலும் இந்தப் பிரவினுள் இல்லாததால் திட்டமிடப் பட்டிருந்தவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த முடியவில்லை. அவ்வாறு இருந்தாலும், தற்பொழுது பயிற்சிப் பிரிவுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிதியை பயன்படுத்தி பதவியணி பயிற்சி பிரிவின் மூலம் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதை அறியத் தருகின்றேன்.
மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருக்கவில்லை.	பயிற்சி விடயங்களின் நிமித்தம் தனியான ஒரு பிரிவு மேலதிக ஆணையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையில் இயங்குகின்றது.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் /நிச்சயமற்ற மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் இருந்தது.	கடந்த சில ஆண்டுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அபிப்பிராயத்தை அவதானிக்கும் போது கீழ் நிலையில் / நிச்சயமற்ற நிலையில் / அதிருப்தியான நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகம் மேலே குறிப்பிடப் பட்டுள்ள விதத்தில் கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளிப்படுத்த அடிப்படையாக அமைந்த காரணங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களில் கண்டறியப்பட்டன. சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறை தற்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வாளர் நாயகம் முன்வைத்துள்ள சிபாரிசுகளை முடியுமான வரை உச்சளவில் செயற்படுத்தி உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.
உத்தியோகத்தர்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நட்டங்களின் நிமித்தம் நி. பி. கு. இலக்கம் 156 (1) இன் பிரகாரம் அறவீடுகளும் ஏதும் அறவிடப்பட்டு இருக்கவில்லை.	உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு ஏற்படுத்திய நட்டங்களை கணக்கிட்டு நி.பி.கு.156(1) இன் பிரகாரம் உரிய அறவீடுகளை அறவிடுவதற்கு தேவையான பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.
உச்ச சேவை காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை உரிய முறையில் இடமாற்றி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	I. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவியிருந்த கொரோனா தொற்றுநோயின் காரணமாக வருடாந்த இடமாற்றத்தை மேற்கொள்ள முடியவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டில் வருடாந்த உள்ளக இடமாற்றல் திட்டம் செயற்படுத்தப்பட்டது. II. 2022 ஆம் ஆண்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியையடுத்து உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்த போது உத்தியோகத்தர்களினால் முகம்கொடுக்க நேர்ந்த இடையூறுகளின் காரணமாக இடமாற்றல் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. III. திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு நீண்டகாலமாக ஒரே மாவட்ட அலுவலகத்தினுள், கமநல சேவை நிலையத்தினுள் அல்லது வி. ஆ. உ. உ. பிரிவினுள் பணிபுரிகின்ற கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை, நிலைய முகாமைத்துவ உதவியாளர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், தொழிலாளர், காவலாளர் ஆகிய பதவிகளுக்கு 2023.05.02 ஆம் திகதி ஒரு உள்ளக இடமாற்றல் நடைமுறைத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டுள்ளது. IV. 2023 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். 2024 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றத்தின் நிமித்தம் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்களை அழைக்குமாறு சகல மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. V. அதே போல், 2024 ஆம் ஆண்டிலும் அந்த செயற்பாடு தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வந்தது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.